**அ.வ.எண்.102/2021**
**பி.வா.சா.1 : பிரபா**
**தேதி : 24.11.2025**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

ஏமூர் கிராமம், சர்வே எண்.113 மற்றும் 115–ல் விஸ்தீரணம் 16 ஏக்கர் 35 செண்ட், 3.40 ஏக்கர் முறையே கொண்ட நிலம் ஆதியில் காளியப்ப கவுண்டருக்கு சொந்தம் என்றால் சரிதான். காளியப்பகவுண்டருக்கு வையாபுரி கவுண்டர், பெரியண்ண கவுண்டர், வீரப்பகவுண்டர் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். மேற்சொன்ன சொத்துக்களில் மேற்சொன்ன வாரிசுகளில் 3 ல் 1பங்கு பொதுவில் சொந்தம் என்றால் சரிதான். வையாபுரிகவுண்டர் 29.08.1928 ஆம் தேதியில் மேற்படி தனக்கு பாத்தியப்பட்ட பொதுவில் 3ல் 1 பங்கை அம்மையப்ப கவுண்டருக்கும், குப்புசாமி நாயுடுவிற்கும் சேர்த்து கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. அம்மையப்ப கவுண்டரும், குப்புசாமி நாயுடுவும் 06.04.1934 தேதியில் அம்மையக்காள் என்பவருக்கு மேற்படி பொதுவில் 3ல் 1 பங்கு சொத்தை விற்பனை செய்தார்கள் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. அம்மையக்காள் 10.07.1936–ல் அம்மையப்ப கவுண்டருக்கு மேற்படி பொதுவில் 3ல் 1 பங்கு சொத்தை விற்பனை செய்தார்கள் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. அம்மையப்பகவுண்டர் 19.04.1944–ல் பிச்சைமுத்துவிற்கு மேற்படி பொதுவில் 3ல் 1 பங்கு சொத்தை விற்பனை செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். அம்மையப்பகவுண்டரின் மகன்களாக கருப்பண்ண கவுண்டர், காளியண்ண கவுண்டர், முத்துசாமி கவுண்டர் ஆகியோரின் வாரிசுகள் 16.06.1948 தேதியில் மேற்கண்ட சொத்தை பொறுத்து பாகபாத்திய விடுதலை பத்திரம் பிச்சைமுத்துவிற்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். பிச்சமுத்துவின் பூர்வீகம் மனவாடி கிராமம்,

சின்னத்தம்பிபாளையம் என்று சொன்னால் சீத்தப்பட்டி கிராமம் என்பது தான் எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகிய இரண்டிலுமே உங்கள் தாத்தா பிச்சமுத்துவின் ஊராக மனவாடி கிராமம், சின்னதம்பிபாளையம் என்று தான் உள்ளது என்று சொன்னால் படித்துப்பார்த்தால் தான் சொல்லமுடியும். உங்கள் தாத்தா பிச்சமுத்துவின் ஊர் மனவாடி கிராமம், சின்னதம்பிபாளையம் என்று சொன்னால் அது உங்கள் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்று பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 24.08.2020 தேதியில் பாப்பாத்தி, சரஸ்வதி, நீங்கள் ஆகிய அனைவரும் சேர்ந்து பாகப்பத்திரம் எழுதிக்கொண்டீர்கள் என்று சொன்னால் சரிதான். **அந்த பாகப்பத்திரம் இதுதான். அது <u>வா.சா.ஆ.31</u> ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வா.சா.ஆ.31–ல் உங்கள் தாத்தா பிச்சமுத்துவிற்கு சொத்தானது எவ்வாறு பாத்தியம் என்று மூல ஆவணங்களை குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.113, 115 ஆகியவற்றில் மொத்தம் 3 ல் 1 பங்கு உங்கள் தாத்தா கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். பொதுவில் 3 ல் 1 பங்கு என்பது 6 ஏக்கர் 58 செண்ட் என்று சொன்னால் மொத்த அளவில் 3 ல் 1 பங்கு. வாதிகள் பெரியண்ணகவுண்டரின் வழிவகை வந்தவர்கள் என்று சொன்னால் காளியப்பகவுண்டரின் 2 வது மகனின் வம்சாவழிவந்தவர்கள் தான் வாதிகள். காளியப்பகவுண்டரின் 3 வது மகன் வீரண்ணகவுண்டர் வழிவந்தவர் தான் இவ்வழக்கில் 1 முதல் 7 வரையுள்ள பிரதிவாதிகள் என்று சொன்னால் அவர்கள் பெரியப்பா, சித்தப்பா என்ற வகையில் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள். 1980–ல் நீங்கள் பாகப்பிரிவினை பிரிந்துள்ளது என்று கூறியுள்ளீர்கள் யார் முன்னிலையில் எந்த தேதியில் பாகம் பங்கினார்கள் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் தேதி, மாதம் எனக்கு ஞாபகமில்லை. யார் முன்னிலையில் பாகம் பங்கினார்கள் என்பதற்கு ஆவணங்கள் என்னிடம் இல்லை. வா.சா.ஆ.31 வது

ஆவணத்திலும் நீங்கள் பாகம் பங்கிய ஆவணத்திலும் நீங்கள் எந்த தேதியில் பாகம் பங்கினீர்கள் என்ற குறிப்பு இல்லை என்று சொன்னால் பட்டாவிலும், யூடிஆரிலும் இருக்கும் விவரங்களை கொண்டு பாகம் பங்கினோம். 1980–ல் எவ்விதமான வாய்மொழி பாகக்கறாரும் தரப்பினர்களுக்கிடையே பங்கிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1985–ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி சர்வே எண்.113–ல் உட்பிரிவுகள் 1, 5, 6, 7 ஆகியவை உங்களுக்கு ஒதுக்கப்ட்டதாக கட்சி செய்கிறேன் என்றால் 1, 6 ம் என்னுடையது, 5, 7 ஆனது 3 ல் 1 பங்கு பாத்தியப்பட்டது. சர்வேஎண்.113/1 –ல் 4 ஏக்கர் 66 செண்ட்டும், 113/6–ல் 3 ஏக்கர் 5 செண்ட்டும் ஆக மொத்தம் 7 ஏக்கர் 71 செண்ட் என்று சொன்னால் ஆவணங்களை பார்த்து தான் பதில் கூற இயலும். சர்வே எண்.113–யை பொறுத்தவரை உங்கள் தாத்தா கிரையம் செய்ததை 5 ஏக்கர் 45 செண்ட்டு தான் என்றும் தவறுதலாக 7 ஏக்கர் 71 செண்ட் என பட்டா ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாத்தா கிரையம் வாங்கியதை விட கூடுதல் விஸ்தீரணம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.115–ல் உங்களுடைய தாத்தா 115/1–ல் 45 செண்ட்டும், 115/5–ல் 16 செண்ட்டும், ஆக மொத்தம் 61 செண்டும், யூடிஆர் படி உங்களுக்கு கிடைத்ததாக கட்சி செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் என் பட்டாபடி உள்ளவைகள் தான். சர்வே எண்.115–ல் கிரையம் வாங்கிய 1 ஏக்கர் 15 செண்ட்டை விட குறைவு என்று சொன்னால் பட்டாப்படி உள்ளது தான். நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தின் படி வழங்கப்பட்ட பட்டா தரப்பினர்களிடம் உரிய விசாரணை மேற்கொள்ளாமல் தன்னிச்சையாக வழங்க்பபட்டது என்று சொன்னால் சரியல்ல. நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தின் படி வழங்கப்பட்ட பட்டாவின் படி நடைமுறைக்கு வரவில்லை என்றும் தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1 முதல் 7 பிரதிவாதிகளின் கூட்டு

அனுபவித்திலும் சுவாதீனத்திலும் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.113 மற்றும் 115–ல் உங்களுடைய தாத்தாவிற்கு கிரையம் வாங்கிய சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் கிடையாது என்று சொன்னால் பூர்வீகமாக அங்கு தான் இருக்கிறார்கள். மேற்படி 113, 115 சர்வே எண்களில் பூர்வீகமாக உங்கள் தாத்தாவிற்கு எவ்வளவு சொத்தில் உரிமை உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் தாத்தா கிரையம் வாங்கியதை தவிர கூடுதல் விஸ்தீரணம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆகிய இரண்டு ஆவணங்களும் வாதியின் குடும்பத்தாருக்கு மூல ஆவணங்கள் எதுவும் இல்லாததால் சார்பதிவாளர் வழிகாட்டுதல் படி பட்டாவை குறிப்பிட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்களை கொண்டு நீங்கள் பாகக்கறார் ஆகிவிட்டது என்று உறுதிபடுத்த முடியாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் 4 வரையுள்ள ஆவணங்கள் அனைத்துமே நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தவறுதலாக வழங்க்பபட்ட பட்டாக்கள் என்றும் அதனடிப்படையில் ஏற்பட்ட இதர பட்டாக்கள் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் நீங்கள் எந்த உரிமையும் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர்களுக்காக நிலத்தினை ஆர்ஜிதப்படுத்தியுள்ளார்கள் என்றும் அதில் வாதிகள் ஒரு தரப்பினராக இல்லாததால் அந்த ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7 முதல் 25 வரையுள்ள கிரைய ஆவணங்கள் மூலமாக சாமியப்பகவுண்டர் மகன் தண்டபானி தன்னிச்சையாக மனைகளாக பிரித்து விற்பனை செய்ததால் அந்த விற்பனைகள் அனைத்தும் செல்லாது என்று அறிவிக்க கோரியும்

சம்மந்தப்பட்டவர்களை தரப்பினர்களாக சேர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. காலதோஷத்தினால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது தேவையான நபர்களை கட்சி சேர்க்கவில்லை என்பதால் வழக்கு நிலைக்கத்தக்கது என்று வாதிடுவது வழக்கிற்காக பொய்யாக வாதிடுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. முறையாக நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரியபடி தாவா சொத்தில் 6 ல் 1 பங்கு கிடைக்க உரிமை உடையவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.11.24 17:05:15 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.